கர்மயோகி காமராசர் கல்வி அறக்கட்டளை ★ கரூர் மாவட்டம்



அன்பு அறிவு அறம்

# கர்மயோகி காமராசர் கல்வி அறக்கட்டளை

பதிவு : 48/2009

# 391, முதல் குறுக்குத்தெரு
வையாபுரி நகர் கரூர் 639 002
www.kamarajartrust.org 95663 84111

# கர்மயோகி காமராசர் கல்வி அறக்கட்டளை

(பதிவு எண் 48/2009)

A.O. : 391, வையாபுரிநகர், முதல் குறுக்குத்தெரு,
கரூர்-639 002.

அன்பு நண்பர்களே !

வணக்கம் ! அன்பும், அறிவும் தான் உலகில் ஆற்றல் வாய்ந்தவை. இவ்விரண்டுக்கும் தான் அதிக ஈர்ப்பு சக்தி உண்டு. உலகில் வாழும் அனைத்து உயிரினங்களிலும் மேம்பட்ட உயிரினமாக மனிதனை ஆக்குவதும் இவ்விரண்டும்தான். இந்த அன்பையும், அறிவையும் மனிதனுக்குள் அதிகபட்ச அளவுக்குக் கொண்டுவருவது கல்வி. இக்கல்வியில் தமிழர்கள் மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த தளராத முயற்சியாளர்களுள் முந்தி நிற்பவர் கர்மயோகி காமராசர் அவர்கள்.

2008 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் க.பரமத்தியில் பள்ளி இறுதித்தேர்வான +2 வில் அதிக மதிப்பெண்கள் பெற்று அரசு நடத்தும் பொறியியல் கல்லூரியில் B.E., முதலாமாண்டில் சேருவதற்கு தேர்வு பெற்றும் பொருளாதார நலிவு காரணமாக கல்லூரியில் சேர இயலாமல் கூலி வேலைக்குச் செல்லும் கடைநிலைக்குத் தள்ளப்பட்டார் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்த மாணவி ஒருவர். டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுபெற்ற தலைமையாசிரியர் பொ.முத்துசாமி, தலைமையாசிரியர் இரா.செல்வக்கண்ணன், ஆசிரியர் ப.அழகுராசு ஆகியோர் க.பரமத்தி பகுதியில் ஒரு அறக்கட்டளை நிறுவி இம்மாணவிக்கும், இவர் போன்ற மற்றவருக்கும் உதவலாம் என்று எண்ணுகிறோம்

நீங்களும் எங்களோடு சேரலாமே என்று என்னிடம் கூறினர். இதை ஏன் கரூர் மாவட்ட அளவில் செய்யக்கூடாது என்ற கேள்வி என்னுள் எழுந்து நண்பர் பேராசிரியர் சேதுபதி மற்றும் அப்னா ஹேண்லூம் தனபதி ஆகியோரிடம் கூறினேன்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

என்று அதிவீரராமபாண்டியன் கல்வியின் சிறப்பைக் கூறியதற்கிணங்க பல நண்பர்களும் ஆதரவுக்கரம் நீட்டியதன் விளைவாக 8.5.2009 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது ஒரு கல்வி அறக்கட்டளை. அரசுப்பள்ளிகளில் படித்து +2ல் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று அரசுக் கல்லூரிகளில் B.E., அல்லது M.B.,B.S. சேருவதற்கு தகுதிபெற்றும் பொருளாதாரக் குறைவினால் படிப்பைத் தொடர இயலாத நிலையில் உள்ள கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரிவையும் சார்ந்த தகுதியான மாணவர்களுக்கு கல்விக்கட்டணம், புத்தகம், விடுதிக்கட்டணம் உட்பட அனைத்துக் கல்வி முதலீட்டுச் செலவுகளையும் ஏற்று உதவி செய்து, மேற்படிப்பை முடிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதுதான் இவ்வறக்கட்டளையின் அடிப்படை நோக்கமாக வரையறுக்கப்பட்டது.

இவ்வறக்கட்டளைக்கு என்ன பெயர் சூட்டுவது என்று சிந்தித்த போது முதலில் தோன்றிய பெயர் காமராசர். மிகவும் பிற்பட்ட வகுப்பில் தோன்றிய காமராசர், நம்நாடு ஆங்கிலேய அடிமைத்தளையிலிருந்துவிடுபட்டு, பழம்பெருமையை மீட்டெடுத்து தன்னிகரில்லாத பெரும் சக்தியாக உலகில் உருப்பெற வேண்டும் என்று கனவு கண்டார். நாட்டு விடுதலைக்காக உழைத்து பல ஆண்டுகள் கடும் சிறைவாசத்தில் துன்பப்பட்டார். தன்னிகரில்லாத தலைவராக மாறி தமிழ்நாட்டின் முதலமைச்சராக, இந்திய நாட்டின் பிரதம அமைச்சர்களை உருவாக்கும் ‘‘கிங் மேக்கர்’’ ஆகத் திகழ்ந்தார்.

மக்களின் நலன் ஒன்றே தம் குறிக்கோளாகத் தொலைநோக்குப் பார்வையோடு பல அணைகளைக் கட்டி வேளாண்மைத் தொழிலுக்கு ஆக்கம் தந்தவராகவும், ஊருக்கு ஊர் தொடக்கப்பள்ளிகளைத் துவக்கியும், பல உயர் கல்வி மையங்களை அமைத்தும் கல்விக்கண் திறந்தவராகவும், பசி வந்தால் கற்றல் நிகழாது என்ற அனுபவ முதிர்வால் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தை வகுத்தும், காட்சிக்கு எளியவராகவும், மக்களுக்குத் தொண்டாற்றும் மகேசனாகவும், நிர்வாகத்தில் கண்டிப்பும் கொண்ட இந்தக் கர்மயோகியைத் தவிர வேறு யார் இந்த அறக்கட்டளைக்குப் பெயர் சொல்லப் பொருத்தமாவார் ?

இவ்வறக்கட்டளை 8.5.2009 ஆம் நாளன்று 48/2009 ஆம் எண்ணாகப் பதிவு செய்யப்பட்டது. **இதற்கு 80-G வருமான வரி விலக்கும் பெறப்பட்டுள்ளது.**

9.8.2009 ஆம் நாளன்று நடைபெற்ற ஒரு எளிய விழாவில், அறக்கட்டளைத் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு 4 ஆண்டு கல்லூரிப் படிப்பின் முழு செலவையும் ஏற்று (புத்தகம், கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம் உட்பட) முதல் காசோலை வழங்கப்பட்டது.

அன்னசத்திரம் ஆயிரம்வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற மகாகவி பாரதியாரின் புண்ணிய வரிகள் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

தானங்களில் மிக உயர்ந்த தானம் வித்யா தானம். வித்யா என்றால் கல்வி. இது இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. அறிவிற் சிறந்த இளைஞர்களை உருவாக்குவதன் மூலம் அறிவார்ந்த மற்றும் பொருளாதார வல்லரசு நாடாக நம் இந்தியத் திருநாடு உருப்பெற்று டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் கனவு மெய்ப்பட, இந்த வித்யா தானத்தில் தாங்களும், தங்களை இணைத்துக்கொள்ள கனிவுடன் வேண்டுகிறோம். வாருங்கள் அறிவார்ந்த பாரதத்தை உருவாக்குவோம்.

நன்றியுடன்
என்றும் மானிட சேவையில்
**Rtn. கு. குணசேகரன்**
செயலாளர்,
கர்மயோகி காமராசர் கல்வி அறக்கட்டளை

**தாங்களும் கர்மயோகி காமராசர் கல்வி**

**அறக்கட்டளையின்**

**உறுப்பினராகி கல்விச் சேவையில்**

**பங்குகொள்ளலாமே !**

# யாருக்கு நிதியுதவி கிடைக்கும் ?

1. மாணவர் கரூர் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

2. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் +2 படித்து, அரசு அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியில் பொறியியல் அல்லது மருத்துவம் (B.E., / M.B.B.S., B.Vsc.,B.Sc., Agri.,) படிக்க இடம் கிடைத்திருந்தும் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மாணவ, மாணவியர்.

3. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் 10 ஆம் வகுப்புவரை படித்து அதிக மதிப்பெண் பெற்ற காரணத்தால் தனியார் பள்ளியில் +2 இலவசமாகப் படித்து பின் அரசு அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியில் பொறியியல் அல்லது மருத்துவம் (B.E., / M.B.B.S., B.Vsc.,B.Sc., Agri.,) படிக்க இடம் கிடைத்திருந்தும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவ, மாணவியர்.

4. தனியார் பள்ளியில் இலவசமாகத் தனி நபரராலோ அல்லது பள்ளி நிர்வாகத்தாலோ இலவசமாக படிக்க வைக்கப்பட்டு, அதிக மதிப்பெண் பெற்று, அரசு அல்லது அரசு உதவி பெறும் கல்லூரியில் பொறியியல் அல்லது மருத்துவம் (B.E., / M.B.B.S., B.Vsc.,B.Sc., Agri.,) படிக்க இடம் கிடைத்திருந்தும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவ, மாணவியர்.

4. மேற்காண் தகுதி பெற்றிருக்கும் மாணவர்களில் பெற்றோர் இருவரையும் அல்லது இருவரில் ஒருவரை இழந்த மாணவ, மாணவிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. மேற்காண் தகுதி பெற்றிருக்கும் எப்பிரிவையும், எம்மதத்தையும் சார்ந்த மாணவ, மாணவியர் நிதியுதவி பெற விண்ணப்பிக்கத் தகுதியானவர்.

5. அறக்கட்டளைத் தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது.

Telegram : "AAYAKAR"
Fax : 0431 - 2411290

Tel. No. (Per) : 0431 - 2411308
(Off) : 0431 - 2410390

GOVERNMENT OF INDIA
OFFICE OF THE COMMISSIONER OF INCOME TAX-I
No.44, Williams Road, cantonment, Tiruchirappalli.

C.No. 6162E(91)/CIT-1/TRY/2011-12 Date: 14/07/2011

**PROCEEDING OF THE COMMISSIONER OF INCOMETAX-I, TIRUCHIRAPALLI**
**Present: Dr.R.K.KAKKAR, I.R.S.**
**Commissioner of Incometax-I, Tiruchirappalli.**

Sub: Grant of approval u/s 80G(5)(vi) of the Income-tax Act, 1961 read with Rule 11AA of the Income-tax Rule 1962- Karmayogi Kamarajar Educational Trust, Amman Complex, K. Paramathy, Covai Main Road, Karur-639 111- Reg.

Ref: Application in Form No.10G filed on 21/01/2011.

**ORDER U/S 80G(5) (vi) of the Income-tax Act, 1961 read with Rule 11AA of Income-tax Rules 1962**

By an order of C.No. 6162E(81)/2009-2010/CIT-1/TRY dated 06/05/2010 the Trust has been granted registration u/s 12AA of the Income-tax Act by the undersigned from the date of creation of the Trust i.e., 08/05/2009. The application in Form No.10G filed on 21/01/2011 is hereby considered for the purpose of approval u/s 80G (5) of the Act.

2. After due consideration of the application and the enclosures thereto and being satisfied that the conditions laid down under section 80G(5) (i) to (v) are prima facie satisfied, approval u/s 80G(5) is hereby accorded from 21/01/2011. The approval u/s 80G will accordingly apply to the donations received after this day. This fact should be prominently mentioned in the receipts issued by the Trust for the donations received by it.

3. Notwithstanding the approval as above, the Assessing Officer is at liberty to examine the applicability of the provisions of section 11 to 13 or any other requirements in accordance with the provisions of the Act.

(Dr.R.K.KAKKAR)
Commissioner of Income-tax-I
Tiruchirappalli.

To

The Managing Trustee
KARMAYOGI KAMARAJAR EDUCATIONAL TRUST,
Amman Complex,
K. Paramathy, Covai Main Road, Karur-639 111

Copy to: 1. The Joint Commissioner of Income tax , Range - II, Trichy.
2. The Income Tax Officer, Ward I(1), Karur.